# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

### <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 18.06.2020. | 1) இம்மாநகராட்சி மேற்கு மண்டல பகுதி வார்டு எண். 35 பாளைரோடு மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த குடிநீர் இணைப்பு பழைய வரிவிதிப்பு எண். 138/51593 தற்போதைய வரிவிதிப்பு எண். 138/035/00593 க்கு 2016–2017 நான்காம் அரையாண்டு முதல் 2017–18 நான்காம் அரையாண்டு வரை குடிநீர் கட்டண கேட்பு எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி குடிநீர் குழாய் இணைப்பு 13.01.2017ம் தேதியில் துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட காலத்திற்கு பிறகும் 2017–2018 நான்காம் காலாண்டு வரை குடிநீர் கட்டண கேட்பு தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்ட தொகை ரூ. 5,67,210– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து இருநுற்றி பத்து) கீழ்க்கண்ட விபரப்படி உள்ள குடிநீர் கட்டண கேட்பினை நீக்கம் செய்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.<br>.2016–2017 நான்காம் காலாண்டு (பிப்ரவரி மார்ச்) ரூ. 81,030.00<br>2017–2018 முதலாம் காலாண்டு முதல்<br>2017–2018 நான்காம் காலாண்டு ரூ. 4,86,180.00<br>————————————<br>ரூ. 4,86,180.00<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/00723/2020/மே.ம. | 97) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2) இம்மாநகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி. ஜி. ஜீவா என்பவர் மாநகராட்சி ஒப்பந்தப்பணிகள் செய்து வந்துள்ளார். தற்போது அன்னார் 27.10.2019 அன்று இறந்துவிட்டபடியால் அன்னாரின் வாரிசு சான்றின் பேரில் மாநகராட்சி ஒப்பந்தப் பணிகளுக்கான பட்டியல் தொகை பிணையத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ஆகியவற்றை வாரிசுதாரரான கணவர் திரு. செ. கில்பர் என்ற பெயரில் வழங்குமாறு கேட்டுள்ளார்.<br>எனவே மாநகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி. ஜி.ஜீவா என்பவர் இறந்துவிட்டபடியால் அன்னாரது பெயரில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற ஒப்பந்தப்பணிகளுக்கான மாநகராட்சி ஒப்பந்தப்பணி பட்டியல் தொகை, பிணையத்தொகை மற்றும் ஒப்பந்தப்பணிகளுக்கான கூடுதல் வைப்புத்தொகை ஆகியன அன்னாரின் கணவர் வாரிசுதாரரான திரு. செ. கில்பர் என்பவர் பெயரில் வழங்கிடவும் மேலும் தற்போது மாநகராட்சியில் திருமதி. ஜி. ஜீவா என்பவர் பெயரில் நடைபெற்று வரும் ஒப்பந்தப்பணிகளை அன்னாரது கணவர் திரு. செ. கில்பர் என்பவர் தொடர்ந்து மேற்கொண்டு பணிகள் முடித்த பணிகளுக்கான பட்டியல் தொகையினை திரு.செ.கில்பர் என்பவர் பெயரில் வழங்கிவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 98)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/1101/2020 | |
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கழிவு செய்யப்பட்ட டி.என்.69 எச்.4446 அம்பாசிடர் கார் வாகனத்தை உரிய கிரையம் செலுத்தி எடுத்துச்செல்லும் பணிக்கு 10.06.2020ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ. 20,300/– திரு. மாரியப்பன் என்பவரால் கோரப்பட்டது. மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்விதாரர் ஏலக்கேள்வி தொகை மற்றும் ஜி.எஸ்டி வரி ஆகியவை சேர்த்து ரூ. 33,960/– ஐ செலுத்தியுள்ளனர். எனவே, மேற்படி ஏலத்தினை முடிவு செய்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை, தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 22,000/–ஐ விட கூடுதலாக உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.இ3/04795/2015 | **99)**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | **4)**இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் ஆண் பெண் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள் மற்றும் துலக்குனர்கள், மற்றும் மருத்துவமனை பெண் உதவியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழங்கப்பட வேண்டியதுள்ளதால் அரசாணை எண். 283 நிதி துறை நாள் 18.06.1996ன் படி, தேவையான துணி வகைகளை முத்துநகர் கோ–ஆப்டெக்ஸ் தூத்துக்குடி நிறுவனத்தினரிடமிருந்து வாங்குவதற்கும் மற்றும் மேற்படி பணியாளர்களுக்கு தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 15,00,000/–னை (பதினைந்து இலட்சம் மட்டும்) இம்மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/1320/2020 | **100)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **5)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டப் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்திடவும், தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலைகள் அமைக்கவும் பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2020–21 (TURIP – PhaseII) தொகுப்பு 2இன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள ரூ 526.15 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. | **101)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| வா.எண் | பணிகள் | சிப்பம் | நீளம் (கி.மீ.) | தொகை (லட்சத்தில்) |
| --- | --- | --- | --- | --- |
| 1 | வார்டு எண். 3 ராஜுவ் நகர் 2வது தெரு கிழக்கு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 1 | 0.71 | 44.50 |
| | வார்டு எண்.3 பாரதிநகர் மெயின் (மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி சுற்றுப் பகுதி பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.88 | 55.40 |
| | வார்டு எண். 4 குறிஞ்சிநகர் 6வது தெரு மற்றும் 7வது தெரு இணைப்பு சாலை பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.17 | 10.50 |
| | வார்டு எண்.4 போல்பேட்டை மேற்குப் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி | | 0.24 | 13.50 |
| | வார்டு எண். 4 போல்பேட்டை 2வது தெரு மற்றும் 3வது தெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணி | | 0.20 | 11.30 |
| | வார்டு எண். 6 எழில் நகர் மற்றும் எஸ்.கே.எஸ்.ஆர் காலனி பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.70 | 38.30 |
| | வார்டு எண். 6 அம்பேத்கார் நகர் (சக்தி கோவில் அருகில்) பகுதியில் பேவர் பிளாக் ச சாலை அமைக்கும் பணி | | 0.74 | 26.30 |
| 2 | வார்டு எண். 48 அமுதாநகர் 1 முதல் 5வது குறுக்குத்தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 2 | 0.17 | 10.00 |
| | வார்டு எண். 48 கணேசன் காலனி 4வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.21 | 13.20 |
| | வார்டு எண். 48 சாந்தி நகர் 2வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.15 | 9.40 |
| | வார்டு எண். 48 முனியசாமி நகர் 1வது தெரு 2வது மற்றும் 3வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.43 | 27.00 |
| | வார்டு எண். 49 சால்ட் காலனி மெயின் குறுக்குத் தெரு சிஜிஇ காலனி 1வது தெரு முதல் சால்ட் காலனி வரை உள்ள பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.47 | 29.50 |
| | வார்டு எண்.52 அம்மன்கோவில் தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் சிறுபாலம் உயர்த்தி கட்டும் பணி மேற்கொள்ளல். | | 0.35 | 25.00 |
| | வார்டு எண். 52 தெற்கு தெரு குறுக்குத்தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | | 0.13 | 8.50 |
| | வார்டு எண்.52 கிருஷ்ணாநகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | | 0.12 | 7.50 |
| | வார்டு எண்.21 திரேஸ்புரம் கடற்கரை லேன் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | | 1.13 | 38.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வார்டு எண். 24 மரக்குடி லேன் பிரமுத்துலேன் பீட்டர் கோவில் குருசடி லேன், நாராயணன் லேன், வைகுண்டர் லேன், வடக்கு ராஜா சாலை சின்னக்கடை லேன், முத்து லேன், மச்சாது லேன் மற்றும் காளியப்பர் லேன் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 3 | 0.78 | 21.50 |
| | வார்டு எண். 28 கீழச்சண்முகபுரம் லேன் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் ய உயர்த்தி கட்டும் பணி | | 0.39 | 13.95 |
| | வார்டு எண். 35 3வது மைல் 1வது தெரு குறுக்கு தெரு 2வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி 3வது தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | | 0.52 | 39.30 |
| | வார்டு எண். 39 மகிழ்ச்சிபுரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | | 0.40 | 22.00 |
| | வார்டு எண்.39 கே.வி.கே. நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணி | | 1.41 | 61.50 |
| | மொத்தம் | | 10.30 | 526.15 |
| | மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள சாலை பணிகள் ரூ. 526.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2020.21 (TURIP Phase II) தொகுப்பு 2 இன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திட கேட்டும் உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதிக்கான பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/1434/2020 | | | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.18.06.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி